**ஜூலை – 24**

# TNPSC துளிகள்

- குஜராத்தின் கவ்டா சூரியசக்தி பூங்காவில் இந்தியாவின் முதல் 100 MWh பயன்பாட்டு அளவிலான வனேடியம் ரெடாக்ஸ் ஓட்ட மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு (VRFB BESS) திட்டத்திற்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை அதிகரிக்க அருணாச்சலப் பிரதேசத்தில் 1,000 மெகாவாட் (MW) நயிங் நீர்மின் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
    - இத்திட்டம் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சியாங் நதிப் படுகையின் துணை நதியான நயிங் ஆற்றின் குறுக்கே உருவாக்கப்படும்.
- லிதுவேனியாவின் வில்னியஸ் நகரில் நடைபெற்ற 37-வது சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் (IBO) 2026-ஆம் ஆண்டில் இந்தியா 1 தங்கம் மற்றும் 3 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.
    - பவ்யா குன்வால் (அரியானா) தங்கப் பதக்கத்தையும், சௌமில் மைட்டி (மேற்கு வங்கம்), நிஷித் கலானி (ராஜஸ்தான்) மற்றும் அன்மோல் குமார் (பஞ்சாப்) ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றனர்.
- டைகர் லைட்னிங் 2026 என்பது வங்கதேச ஆயுதப் படைகளுக்கும் அமெரிக்க பசிபிக் இராணுவப் படைக்கும் (USARPAC) இடையே ஆண்டுதோறும் நடைபெறும் 13 நாள் இரு தரப்பு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.
    - இந்த ஆண்டுக்கான பயிற்சி வங்கதேசத்தின் சில்ஹெட்டில் உள்ள ஜலாலாபாத் இராணுவ முகாமில் நடைபெற்றது.
- 1927-ஆம் ஆண்டில் இந்தியாவில் முறைப்படுத்தப்பட்ட வானொலி ஒலிபரப்பு தொடங்கியதைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 23 அன்று தேசிய ஒளிபரப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.
    - இந்திய ஒலிபரப்பு நிறுவனமானது (IBC) தனது முதல் வானொலி சேவையை 1927 ஆம் ஆண்டு ஜூலை 23 அன்று தொடங்கிய பின்னர் 1936-ஆம் ஆண்டில் அகில இந்திய வானொலியாக (AIR) உருவானது.
- அப்பல்லோ 11 நிலவில் தரையிறங்கியதன் 57-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டு ஜூலை 20 அன்று தேசிய விண்வெளி ஆய்வு தினம் கடைபிடிக்கப்பட்டது.
- மூளை ஆரோக்கியம் மற்றும் நரம்பியல் கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 2026 ஆம் ஆண்டு ஜூலை 22 அன்று உலக மூளை தினம் கடைபிடிக்கப் படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு Brain Health: Access For All என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## தமிழ்நாட்டின் சரக்கு ஏற்றுமதி 2025–26

- 2025-26-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சரக்கு ஏற்றுமதி 58.95 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது என மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக (2023-24 ஆம் ஆண்டு முதல்) மூன்றாவது பெரிய ஏற்றுமதி செய்யும் மாநிலமாக தமிழ்நாடு நீடிக்கிறது.

- ❖ மாநிலத்தின் சரக்கு ஏற்றுமதி 43.22 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து (2023-24) 51.83 பில்லியன் அமெரிக்க டாலராகவும் (2024-25), 58.95 பில்லியன் அமெரிக்க டாலராகவும் (2025-26) அதிகரித்துள்ளது.
- ❖ 2025-26-ஆம் ஆண்டில், இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 41.63%, மோட்டார் வாகனங்கள் மற்றும் கார்களில் 33.38%, தோல் மற்றும் தோல் பொருட்களில் 35.59%, ஜவுளி மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களில் 23.13%, மற்றும் பொறியியல் இயந்திரப் பொருட்களில் 16.66% ஆகியவற்றை தமிழ்நாடு பங்களித்து உள்ளது.
- ❖ இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 32.84% (2023-24) லிருந்து 38% (2024-25) ஆகவும், 41.63% (2025-26) ஆகவும் அதிகரித்துள்ளது.
- ❖ ஏற்றுமதி உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக 2014-15 மற்றும் 2025-26 ஆம் ஆண்டுக்கு இடையில், தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்களில் ₹12,523 கோடி மதிப்பிலான 94 திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.




## தமிழ்நாட்டிற்கான சமக்ர சிக்ஷா நிதி





- ❖ தமிழ்நாட்டிற்கு சமக்ர சிக்ஷா நிதி விடுவிக்கப்படுவது தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020-ஐ செயல்படுத்துவதோடு தொடர்புடையது என்று மத்திய அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

- 'சமக்ர சிக்சா' திட்டத்தின் கீழ், 'கல்வி உரிமைச் சட்டம்' (RTE) தொடர்பான கூறிற்கான நிதியும் உரிய காலத்தில் மாநிலத்திற்குத் தனியாக விடுவிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- PM-SHRI திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) தமிழ்நாடு கையெழுத்திட வில்லை, எனவே தேசிய கல்விக் கொள்கை 2020-ஐ முழுமையாக செயல்படுத்த வில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- 2026-27-ஆம் ஆண்டிற்கு, சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ₹3,041.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது, இதில் மத்திய அரசின் பங்காக ₹1,825 கோடியும் (60 சதவிகிதம்), மாநில அரசின் பங்காக ₹1,216 கோடியும் (40 சதவிகிதம்) அடங்கும்.
- மொத்த ஒதுக்கீடு ₹3,586 கோடியிலிருந்து (2024-25), ₹3,044.52 கோடியாகவும் (2025-26) மற்றும் ₹3,041.81 கோடியாகவும் (2026-27) குறைந்துள்ளது.
- 2026-27-ஆம் ஆண்டிற்கான கல்வி உரிமை (உரிமைகள்) கூறிற்கான ஒதுக்கீடு ₹624.19 கோடியாகும், இதில் மத்திய அரசின் பங்கு ₹374.51 கோடியாகும்.
- சமக்ர சிக்ஷா என்பது தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் ஆசிரியர் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டமாகும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் பணியில் ஏற்படும் உயிரிழப்புகள்





- கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா முழுவதும் கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் கழிவு நீர் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் போது 332 பேர் உயிரிழந்துள்ளனர் என மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- தமிழ்நாடு 38 உயிரிழப்புகளைப் பதிவு செய்துள்ளது. இது மகாராஷ்டிரா (58) மற்றும் அரியானாவுக்கு (47) அடுத்தபடியாக நாட்டில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- மனிதக் கழிவுகளை அள்ளுவோராகப் பணியமர்த்துவதைத் தடை செய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம், 2013 மனிதக் கழிவுகளை அள்ளுவோராகப்

பணியமர்த்துவதைத் தடை செய்கிறது மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வை வழங்குகிறது.

- மனிதக் கழிவுகளை அள்ளுவோராகப் பணியமர்த்துதல் மற்றும் உலர் கழிப்பறைகள் கட்டுதல் (தடை) சட்டம், 1993 என்பது மனிதக் கழிவுகளை அள்ளுவதையும் உலர் கழிப்பறைகள் கட்டுவதையும் தடைசெய்த முதல் மத்திய சட்டமாகும்.
- இந்திய உச்ச நீதிமன்றம் (2023), கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தம் செய்வதை முழுமையாக இயந்திரமயமாக்கவும், பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதை உறுதி செய்யவும் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் உத்தரவிட்டுள்ளது.

## கர்த்தவ்ய பவன் பகுதி

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால், சென்ட்ரல் விஸ்டா (எழில் முற்றம்) மறுவடிவமைப்புப் பகுதியை 'கர்த்தவ்ய பவன் வளாகம்' அல்லது 'கர்த்தவ்ய பவன் பகுதி' என்று குறிப்பிட வேண்டும் என்று கூறினார்.
- 'சென்ட்ரல் விஸ்டா' என்ற பெயரை இனி பயன்படுத்தக் கூடாது.
- பல கர்த்தவ்ய பவன்கள், கர்த்தவ்ய மார்க் மற்றும் இப்பகுதியில் அமையவிருக்கும் எதிர்கால அரசு கட்டிடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய முழு வளாகமும் 'கர்த்தவ்ய பவன் பகுதி' என்றே அழைக்கப்படும்.
- 2022-ஆம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடி, ராஷ்டிரபதி பவனிலிருந்து இந்தியா கேட் வரையிலான இரண்டு கிலோமீட்டர் நீளமுள்ள ராஜ்பாத் சாலையை, கர்த்தவ்ய பாத் என அதிகாரப்பூர்வமாகப் பெயர் மாற்றினார்.
- அதேபோல், பிரதமர் அலுவலகம், அமைச்சரவைச் செயலகம் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அலுவலகம் அமைந்துள்ள புதிய வளாகத்திற்கு 'சேவா தீர்த்தம்' எனப் பெயரிடப்பட்டது.




## 'Catch the Rain' பிரச்சாரம் 2026

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் (MoHUA), அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், இந்தியா முழுவதும் நகர்ப்புறங்களில் இந்த நாடு தழுவிய முன்னெடுப்பின் நோக்கங்களை முன்னெடுத்து வருகிறது.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஜல் சக்தி அமைச்சகத்துடன் (MoJS), ஜல் சக்தி அபியான்–ஜன் பகிதாரி (JSJB) 2.0 இன் கீழ் இணைந்துள்ளது.

- மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல், பாரம்பரிய நீர்நிலைகளை மீட்டெடுத்தல், மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பொதுமக்களின் பங்கேற்பு ஆகியவற்றைத் தீவிரப்படுத்துவதற்காக ஒரு பிரத்யேக நாடு தழுவிய பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
- இது சமூகம், பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR), மற்றும் செலவு (3Cs) ஆகிய கொள்கைகளால் வழி நடத்தப்பட்டது.
- அறிவியல் ரீதியான நீர்நிலைப் படமாக்கல் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டலை மேம்படுத்துவதற்காக, அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ஆழமற்ற நீர்நிலை மேலாண்மை (SAM) திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- "Catch the Rain – Where it Falls, When it Falls" என்ற பிரச்சாரத்தின் வேகத்தைத் தக்க வைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## நபார்டின் புவிசார் குறியீட்டுப் பதிவு

- நபார்டு வங்கியானது 28 பொருட்களின் புவிசார் குறியீட்டுப் பதிவுக்கு வழி வகுத்து உள்ளது.
- மொத்தத்தில், 176 பொருட்கள் புவிசார் குறியீட்டுப் பதிவைப் பெறுவதற்கு இது ஆதரவளித்துள்ளது.
- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 1982-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது மற்றும் இதன் தலைமையகம் மும்பையில் உள்ளது.
- இது 1979-ஆம் ஆண்டில் சிவராமன் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிறுவப்பட்டது.
- இது இந்தியாவின் உச்ச வளர்ச்சி நிதி நிறுவனமாகும்.
- இது முழுமையாக இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமானது.

- இது நிலையான வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சியை ஒழுங்குபடுத்துதல், நிதியளித்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாகும்.
- இது இந்தியாவில் உள்ள மண்டல ஊரக வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் ஒட்டுமொத்த மேற்பார்வைக்கான ஒரு உச்ச மேற்பார்வைக் குழுவாகும்.
- இது நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள நிதிச் சேவைகள் துறையின் (DFS) கீழ் செயல்படுகிறது.
- கிராமப்புறங்களில் பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக முதலீடு மற்றும் உற்பத்திக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு இது ஒரு உச்ச நிதி நிறுவனமாகச் செயல்படுகிறது.
- மேலும் இது, உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் (SCARDBs), மாநில கூட்டுறவு வங்கிகள் (SCBs), மண்டல ஊரக வங்கிகள் (RRBs), வணிக வங்கிகள் (CBs) மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிற நிதி நிறுவனங்களுக்கு நிதியை மறு நிதி அளிக்கிறது.




## சர்வதேசச் செய்திகள்

### மால்டோவா மற்றும் வடக்கு மாசிடோனியாவுக்கான இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் பயணம்

- இந்தியாவின் அரசுத் தலைவர் ஒருவர் மால்டோவா மற்றும் வடக்கு மாசிடோனியா ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட முதலாவது அரசுமுறைப் பயணத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் நிறைவு செய்தார்.
- வடக்கு மாசிடோனியாவில் செயற்கை நுண்ணறிவு (AI) திறன் மேம்பாடு உட்பட இரு

நாடுகளின் வல்லுநர்களுக்கான இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) பயிற்சி இடங்களை இருமடங்காக அதிகரிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

- இந்தியா-மால்டோவா வணிக மன்றத்தின் மூலம் வர்த்தகம், முதலீடு மற்றும் உறுதியான விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதில் இந்தியா மால்டோவாவில் கவனம் செலுத்தியது.
- 2022-ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய (EU) வேட்பாளர் அந்தஸ்தைப் பெற்ற மால்டோவா கிழக்கு ஐரோப்பாவில் நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாடாகும், இதன் எல்லையில் ருமேனியா மற்றும் உக்ரைன் உள்ளன.
- வடக்கு மாசிடோனியா என்பது தென்கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள, கடலால் சூழப்படாத ஒரு பால்கன் நாடாகும்; இது கிரீஸுடனான தனது பெயர் தொடர்பான சிக்கலைத் தீர்த்த பிறகு, 2020-ஆம் ஆண்டில் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) உறுப்பினராகியது.




# சுற்றுச்சூழல் செய்திகள்


## A23a பனிப்பாறைச் சிதைவு

- உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான A23a, கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக நகர்ந்து வந்த நிலையில், தென் அட்லாண்டிக் பெருங்கடலில் சிறிய துண்டுகளாக உடைந்து உள்ளது.
- A23a பனிப்பாறை 1986-ஆம் ஆண்டில் அண்டார்டிகாவின் ஃபில்ச்னர்-ரோன் பனி அடுக்கிலிருந்து (Filchner-Ronne Ice Shelf) உடைந்த நிலையில், தனது நீண்ட நகர்வைத் தொடங்குவதற்கு முன்பு பல தசாப்தங்களாக கடல் தளத்தில் தரைதட்டி நின்றது.
- இது அதன் உச்ச நிலையில் சுமார் 3,900 சதுர கிமீ பரப்பளவைக் கொண்டிருந்தது என்ற நிலையில் இதுவே இதுவரையில் பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய பனிப்பாறைகளில் ஒன்றாகவும் பல நகரங்களை விடப் பெரியதாகவும் இருந்தது.
- இந்த பனிப்பாறை வெடல் கடல் வழியாக நகர்ந்து பின்னர் தென் அட்லாண்டிக் பெருங் கடலுக்குள் நுழைந்தது என்பதுடன் அங்குள்ள வெப்பமான நீர் அதன் உருகுதல் மற்றும் துண்டாதலை துரிதப்படுத்தியது.

- இது உடைவதற்கு வெப்பமான கடல் நீரோட்டங்கள், அலைகளின் தாக்கம் மற்றும் உருகிய நீர் ஆகியவற்றுக்கு நீண்ட காலம் வெளிப்பட்டதே காரணமாக இருப்பதுடன் இது அண்டார்டிக் சூழலில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்கிறது.




## புதிய ஊசித்தும்பி இனம் - லெஸ்டெஸ் பலோட்டி




- கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அறிவியலாளர்கள் 'லெஸ்டெஸ் பலோட்டி' (Lestes paloti) என்ற புதிய பரந்த இறக்கைகளைக் கொண்ட ஊசித்தும்பி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ஓடோனாட்டா வரிசையின் கீழ் உள்ள லெஸ்டிடே குடும்பத்தைச் சேர்ந்த இந்த லெஸ்டெஸ் பலோட்டிக்கு இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் (ZSI) டாக்டர் முகம்மது ஜாபர் பலோட் என்பவரின் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த இனம் கேரளாவின் கண்ணூர், கோழிக்கோடு, வயநாடு, மலப்புரம், பாலக்காடு மற்றும் எர்ணாகுளம் ஆகிய ஆறு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் இது செம்புரைக்கல் குன்றுகள் மற்றும் புதர் தாவரப் பகுதிகளில் வாழ்கிறது.

- இது ஒரு தனித்துவமான பருவகால நிறமாற்றத்தைக் காட்டுகிறது, வறண்ட காலங்களில் பழுப்பு நிறத்திலும் மற்றும் பருவமழையின் போது நீல நிறத்திலும் காட்சியளிக்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கடைசியாக லெஸ்டெஸ் இனம் விவரிக்கப்பட்ட 97 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளதுடன் இது கேரளாவின் தும்பி இனங்களின் (தட்டான் மற்றும் ஊசித்தும்பிகள்) பன்முகத்தன்மையை 192 ஆக உயர்த்துகிறது.

## இரண்டு புதிய சிலந்தி இனங்கள் கண்டுபிடிப்பு




- இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தைச் (ZSI) சேர்ந்த அறிவியலாளர்கள் மேகாலயா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் சிமோனியா லாபா (Simonia lawbah) மற்றும் ஹமடலிவா பாபிகொண்டா (Hamataliwa papikonda) ஆகிய இரண்டு புதிய சிலந்தி இனங்களைப் பதிவு செய்துள்ளனர்.
- சிமோனியா லாபா என்பது மேகாலயாவில் உள்ள கிரெம் லாபா குகையில் காணப் பட்ட தேரிடியோசோமாடிடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புதிய குகைவாழ் ரே (ray) சிலந்தி ஆகும்.
- இந்தியாவில் சிமோனியா பேரினத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் இனம் இதுவாகும்.
- ஹமடலிவா பாபிகொண்டா என்பது ஆந்திரப் பிரதேசத்தின் பாபிகொண்டா தேசியப் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்ஸியோபிடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புதிய லின்க்ஸ் (lynx) வகை சிலந்தி ஆகும்.
- ஆந்திரப் பிரதேசத்தில் ஹமடலிவா பேரினத்தில் ஆவணப்படுத்தப்பட்ட முதல் நிகழ்வு இதுவாகும்.

## கானமயில் பாதுகாப்பு நிலை

- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) மேற்கொண்ட சமீபத்திய மதிப்பீட்டில், கானமயிலின் (ஆர்டியோடிஸ் நைக்ரிசெப்ஸ்) எண்ணிக்கை சுமார் 110–150 பறவைகள் என்ற அளவில் நிலையாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- IUCN-இன் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ள கானமயில், தற்போது ராஜஸ்தானின் தார் பாலைவனத்தில் அதன் சாத்தியமான வாழ்விடத்தில் 16% அளவில் மட்டுமே காணப்படுகிறது.
- இக்கணக்கெடுப்பின் போது சுமார் 130 கானமயில்கள் (±21 மாறுபாடு), 35 கானமயில் கூட்டங்கள், 1,568 சிங்காரா மான்களின் மந்தைகள் மற்றும் 79 பாலைவன நரிகள் பதிவு செய்யப் பட்டன.
- வாழ்விடப் பிளவு, வேளாண் விரிவாக்கம், வேட்டையாடுதல், முட்டைகளை உண்ணுதல் மற்றும் மின் கடத்துத் தடத்தில் மோதுதல் ஆகியவை இதற்கான முக்கிய அச்சுறுத்தல்களாகும்.
- கானமயில் பாதுகாப்புத் திட்டம், சாம் மற்றும் ராம்தேவ்ரா மையங்களில் இனப் பெருக்கம் செய்தல், வாழ்விட மேம்பாடு மற்றும் உச்ச நீதிமன்றத்தின் வழி காட்டுதலின்படி மின்கடத்துத் தடங்களை நிர்வகித்தல் ஆகியவை இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அடங்கும்.





## தூத்துக்குடி கடற்கரையில் சதுப்புநிலக் காடுகள் பாதுகாப்பு முயற்சிகள்

- தூத்துக்குடி கடற்கரையில், நான்கு ஆண்டுகளில் 140 ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் சதுப்புநிலக் காடுகள் மீட்டெடுக்கப்பட்டு, சதுப்புநிலக் காடுகள் பாதுகாப்பு முயற்சிகள் செழித்து வருகின்றன.
- பசுமைத் தமிழ்நாடு இயக்கம், பருவநிலை மாற்றப் பதிலுக்கான தமிழ்நாடு பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டம் (TNGPCCR), தமிழ்நாடு கடல் வளங்களை நீடித்த முறையில் பயன்படுத்துதல் மற்றும் நீலப் பொருளாதாரம் (TN-SHORE) இயக்கம் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளின் கீழ் இந்த மீட்டெடுப்புப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கடற்கரை அரிப்பு, புயல் அலைகள், ஓதப் பெருக்கெடுப்பு மற்றும் உவர்நீர் ஊடுருவல் ஆகியவற்றிற்கு எதிராக சதுப்புநிலக் காடுகள் ஒரு இயற்கையான தடுப்பாகச் செயல் படுகின்றன.
- தாமிரபரணி ஆற்றின் முகத்துவாரம் அமைந்துள்ள புன்னக்காயல் பகுதியில் மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளில் வனத்துறை கவனம் செலுத்தி வருகிறது.
- மீட்டெடுப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஓத நீர் சதுப்புநிலச் சூழல் அமைப்பின் ஒவ்வொரு மூலைக்கும் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, மீன்முள் வடிவக் கால்வாய் வடிவமைப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- அவிசென்னியா மரினா போன்ற சதுப்புநிலத் தாவர இனங்கள், அவற்றின் அதிக உப்புத்தன்மை தாங்கும் திறன் காரணமாக, மீட்டெடுக்கப்பட்ட பெரும்பாலான பகுதிகளில் நடப்பட்டுள்ளன.
- அதே நேரத்தில், ரைசோஃபோரா முக்ரோனாட்டாவும் பொருத்தமான இடங்களில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்த சதுப்புநிலக் காடுகள், வளமான கடல் மற்றும் கழிமுகப் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு ஆதரவளிப்பதோடு, மீன்கள், இறால்கள் மற்றும் பிற நீர்வாழ் உயிரினங்களுக்கு ஒரு முக்கிய வளர்ப்பு மற்றும் இனப்பெருக்கத் தளமாகவும் விளங்குகின்றன.
- இதன் மூலம் உள்ளூர் மீன்வளத்திற்கு அவை குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை அளிக்கின்றன.
- மேலும், கார்பன் பிரித்தெடுத்தல் மூலம் பருவநிலை மாற்றத் தணிப்பிலும் அவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- அத்துடன், கடலோர மற்றும் சதுப்புநிலக் காடுகளைச் சார்ந்து வாழும் சமூகங்களின் வாழ்வாதாரத்தைத் தக்க வைக்கும் அத்தியாவசியச் சூழல் மண்டலச் சேவைகளையும் வழங்குகின்றன.
- புரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா பரவுவதைத் தடுப்பதற்காக, சால்வடோரா பெர்சிகா போன்ற தொடர்புடைய இனங்களை நடுவதற்கான திட்டங்களும் செயல் படுத்தப் பட்டு வருகின்றன.





## பருவமழை ஆவியாதல்

- இந்தியாவின் பருவமழைத் திரளில் சுமார் 25% தரையைத் தொடுவதற்கு முன்பே

நடுவானில் ஆவியாகிறது.

- இது புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (IITM) சமீபத்தில் நடத்திய ஒரு ஆய்வாகும்.
- நடுவானில் ஏற்படும் இந்த இழப்பானது, சுற்றுப்புற வெப்பநிலை, வெப்பம் மற்றும் வறண்ட காற்று போன்ற உள்ளூர் வளிமண்டலக் காரணிகளால் முதன்மையாக நிர்ணயிக்கப்படுகிறது.
- நடுவானில் ஏற்படும் சராசரி இழப்பு 25% ஆக இருந்தாலும், துல்லியமான ஆவியாதல் விகிதம், சுற்றுப்புற வானிலை நிலைகளைப் பொறுத்து, நாளுக்கு நாள் 4% முதல் 61% வரை பெருமளவில் மாறுபடுகிறது.
- நீர் ஆவியாகும் போது, இலகுவான நீர் மூலக்கூறுகள் முதலில் காற்றில் வெளியேறுகின்றன.
- இதனால், விழும் மீதமுள்ள மழைத்துளியில் கனமான ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் ஐசோடோப்புகள் அதிக அளவில் செறிந்து காணப்படுகின்றன.
- இந்தியாவின் 25% நடுவான ஆவியாதல் விகிதமானது, உலகளாவிய அடிப்படை அளவுகளின் கீழ் எல்லையில் உள்ளது.
- இந்த முதன்மை அளவீடுகள் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் வடக்கு மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் புனே பகுதிகளில் சேகரிக்கப் பட்டன.




## CITES அமைப்பின் தாவரங்கள் குழுவின் 28வது கூட்டம் (PC28)

- வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் அழிந்துவரும் இனங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான மாநாட்டின் (CITES) தாவரங்கள் குழுவின் 28வது கூட்டம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்றது.
- CoP20 (சமர்கண்ட், உஸ்பெகிஸ்தான், 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்) க்குப் பிறகு தாவரங்களை மையமாகக் கொண்ட முதல் கூட்டம் இதுவாகும்.
- CoP21 (பனாமா நகரம், 2028 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்) வரை செல்லும் ஒரு புதிய 3 ஆண்டு சுழற்சியின் தொடக்கத்தை இது குறிக்கிறது.
- தாவரங்கள் குழு, CITES அமைப்பின் கீழ் உள்ள இரண்டு நிரந்தர அறிவியல் அமைப்புகளில் ஒன்றாகும் (மற்றொன்று விலங்குகள் குழு).
- ஒரு புதிய பரிமாணமாக, பூஞ்சைகள் முதல் முறையாக ஒரு தனி நிகழ்ச்சி நிரல் பொருளாக விவாதிக்கப்பட்டன.

- இது CITES அமைப்பின் அறிவியல் ஆர்வம் தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு அப்பால் விரிவடைந்து வருவதற்கான ஒரு அறிகுறியாகும்.
- மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு மற்றும் காங்கோ ஆதரவுடன், குக்குல் பட்டியலிடப்படுவதற்கு முன்பு வலுவான அறிவியல் ஆதரவு தேவை என்று இந்தியா வாதிட்டது.
- பின்னிணைப்பு II-இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள குக்குல், இந்தியாவின் ஆயுர்வேதத் தொழிலைப் பாதிக்கிறது.
- அஸ்ஸாம், மணிப்பூர், நாகாலாந்து மற்றும் திரிபுராவில் பயிரிடப்படுவதைக் காரணம் காட்டி, இந்தியா முன்னதாக அகர்வுட் அல்லது அக்விலேரியா மலசென்சிஸை முக்கிய வர்த்தக மீளாய்விலிருந்து விலக்கி வைத்திருந்தது.
- இந்தியா அதிக ஏற்றுமதி ஒதுக்கீட்டைப் பெற்றிருந்தது;
- அகர்வுட் வர்த்தக வழிகாட்டுதலைச் செம்மைப்படுத்தும் பணிக்குழுவில் இந்தியா அங்கம் வகிக்கிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு 2026

- உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு (GTI) 2026-இன் 13-வது பதிப்பு, 2025-ஆம் ஆண்டில் உலகளாவிய பயங்கரவாதம் சரிவைக் கண்டதாக அறிக்கை அளித்துள்ளது, பயங்கரவாதம் தொடர்பான இறப்புகள் 28% குறைந்துள்ளன மற்றும் சம்பவங்கள் 22% குறைந்து உள்ளன.
- ஆஸ்திரேலியாவின் சிட்னியைத் தலைமையிடமாகக் கொண்ட பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் (IEP) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தாக்குதல்கள் குறைந்த போதிலும், பயங்கரவாதம் அதிக கவனம் செலுத்தப் படுவதாகவும், பரவலாக்கப்பட்டதாகவும் மற்றும் டிஜிட்டல் முறையைச் சார்ந்ததாகவும் மாறி வருகிறது.
- பயங்கரவாதம் தொடர்பான உயிரிழப்புகளில் சுமார் 70% பாகிஸ்தான், புர்கினா பாசோ, நைஜீரியா, நைஜர் மற்றும் காங்கோ ஜனநாயக குடியரசு (DRC) ஆகிய நாடுகளில் நிகழ்ந்துள்ளன.
- பயங்கரவாதக் குழுக்கள் இணையவழித் தீவிரவாதம், தனிநபர் தாக்குதல்கள், சிறிய தன்னாட்சிக் குழுக்கள் மற்றும் டிஜிட்டல் தளங்களை அதிகளவில்

பயன்படுத்துகின்றன.

**GTI 2026 Overall Results**
**MEASURING THE IMPACT OF TERRORISM**

| Rank | Country | Score | Rank Change |
|---|---|---|---|
| 1 | Pakistan | 8.574 | ↖1 |
| 2 | Burkina Faso | 8.324 | ↘1 |
| 3 | Niger | 7.816 | ↖2 |
| 4 | Nigeria | 7.792 | ↖2 |
| 5 | Mali | 7.586 | ↘1 |
| 6 | Syria | 7.545 | ↘3 |
| 7 | Somalia | 7.391 | ↔ |
| 8 | Democratic Republic of the Congo | 7.171 | ↖4 |
| 9 | Colombia | 7.116 | ↖5 |
| 10 | Israel | 6.79 | ↘2 |
| 11 | Afghanistan | 6.678 | ↘2 |
| 12 | Cameroon | 6.593 | ↘2 |
| 13 | India | 6.428 | ↖2 |

# மாநிலச் செய்திகள்

## மத்தியப் பிரதேசத்தில் பொது சிவில் சட்ட மசோதா

- மத்தியப் பிரதேச அமைச்சரவை பொது சிவில் சட்ட (UCC) மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- அரசியலமைப்பின் 342 மற்றும் 366 (பிரிவு 25) ஆகிய சரத்துகளின் கீழ் வரும் பழங்குடியினச் சமூகங்களின் "தனித்துவமான கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் பாரம்பரிய வாழ்க்கை முறையை" பாதுகாக்கும் பொருட்டு, அவர்கள் இந்தச் சட்டத்தின் வரம்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.
- பொது சிவில் சட்டம் இந்த மாநிலத்தில் உள்ள அனைவருக்கும் சம அந்தஸ்து வழங்கும்.
- இந்த மாநிலத்தில் பலதார மணம் இனி செல்லுபடியாகாது.
- வாய்மொழி விவாகரத்து அல்லது முறைசாரா பஞ்சாயத்துகளால் எடுக்கப்படும் முடிவுகள் முற்றிலும் சட்டவிரோதமானவை என அறிவிக்கப்பட்டுள்ளன.
- இனிமேல், சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட தெளிவான மற்றும் சட்டப் பூர்வமான காரணங்களின் அடிப்படையில் மட்டுமே ஒரு திருமணத்தை ரத்து செய்ய முடியும்.
- சேர்ந்து வாழும் உறவில் இருப்பவர்கள் ஒரு மாதத்திற்குள் பதிவு செய்ய வேண்டும்.
- சேர்ந்து வாழும் உறவில் நுழைவதற்கான குறைந்தபட்ச வயது 18 ஆக இருந்தாலும், முன்மொழியப்பட்ட சட்டத்தின்படி, இருவரில் ஒருவர் 21 வயதுக்குக் குறைவாக இருந்தால், சேர்ந்து வாழும் உறவின் தொடக்கம் மற்றும் முடிவு குறித்த தகவல்கள் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு அனுப்பப்படும் என்றும்,

பதிவாளர் அந்தப் பதிவை உள்ளூர் காவல்துறையுடனும் பகிர்ந்து கொள்வார் என்றும் கூறப்பட்டுள்ளது.

- ❖ கிராமம் வரை திருமணப் பதிவு கட்டாயமாக்கப்படும்.
- ❖ இது பலதார மணம் மற்றும் நிகாஹ் ஹலாலா போன்ற நடைமுறைகளுக்குத் தடை விதிக்கப் பரிந்துரைக்கிறது.
- ❖ பெண்களுக்கான திருமண உரிமைகள், ஜீவனாம்சம் மற்றும் பல்வேறு சட்டப் பாதுகாப்புகளை உறுதி செய்வதற்காக, அனைத்துச் சமூகங்களிலும் திருமணங்கள் மற்றும் விவாகரத்துகளை அரசாங்க இணையதளங்கள் மூலம் பதிவு செய்வது கட்டாயமாக்கப்படும்.
- ❖ திருமணமான அல்லது திருமணமாகாத பெற்றோரின் குழந்தைகள்—அவர்கள் உயிரியல் ரீதியானவர்களாகவோ, தத்தெடுக்கப்பட்டவர்களாகவோ, அல்லது வாடகைத் தாய் மூலமாகவோ அல்லது உதவி இனப்பெருக்கத் தொழில்நுட்பம் (ART) மூலமாகவோ பிறந்தவர்களாகவோ இருந்தாலும்—சமமான சட்ட அந்தஸ்தைப் பெறுவார்கள்.
- ❖ மேலும், இது மகன்களுக்கும் மகள்களுக்கும் அவர்களின் திருமண நிலையைப் பொருட்படுத்தாமல் சமமான வாரிசுரிமைகளை வழங்க முயல்கிறது.




## அருணாச்சலப் பிரதேசத்தில் இந்தியாவின் முதல் ஆற்று இயக்க ஆற்றல் செயல்விளக்க ஆலை

- ❖ இந்தியாவின் முதல் இயக்க ஆற்றல் செயல்விளக்க ஆலையை நிறுவுவதற்காக, அருணாச்சலப் பிரதேச அரசு நார்வேயின் டைடல் செயில்ஸ் ஏஎஸ் (Tidal Sails AS) நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ❖ பெரிய சிவில் உள்கட்டமைப்புகள் தேவைப்படாமல், ஆற்று நீரோட்டங்களிலிருந்து

நேரடியாக மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை செயல்விளக்கம் அளிக்கும் 500-kW திட்டத்தை செயல்படுத்த இது மாநிலத்திற்கு உதவும்.

- இவ்வாறு, இது சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் செலவு குறைந்த ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வை வழங்கும்.
- அருணாச்சலப் பிரதேசத்தில் மதிப்பிடப்பட்ட நீர்மின் ஆற்றல் திறன் 58,000 மெகாவாட் ஆகும்.




## இடர் அடிப்படையிலான வணிக அனுமதி முறை

- சத்தீஸ்கர், 'வணிகம் செய்வதை எளிதாக்கும் சட்டம் 2026'-ஐ நிறைவேற்றியது.
- இது இடர் அடிப்படையிலான அனுமதி முறையை அறிமுகப்படுத்துகிறது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) இணக்க நடைமுறைகளை எளிதாக்கும் நோக்கில், நம்பிக்கை அடிப்படையிலான வணிக அனுமதி கட்டமைப்பை ஏற்றுக்கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாக சத்தீஸ்கர் திகழ்கிறது.
- தொழில்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான விரிவான இடர் அடிப்படையிலான அனுமதிக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தும் நாட்டின் முதல் மாநிலமாக இது அமைய உள்ளது.
- இச்சட்டம், இணக்கச் சுமைகளைக் குறைப்பதையும், வணிகங்களை அமைப்பது மற்றும் இயக்குவது தொடர்பான நடைமுறைகளை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய கட்டமைப்பின் கீழ், தொழில்கள் மற்றும் வணிகங்கள் அவற்றின் அளவு மற்றும் செயல்பாடுகளின் தன்மையின் அடிப்படையில் வெவ்வேறு இடர் வகைகளாக வகைப்படுத்தப்படும்.
- குறைந்த இடர் கொண்ட நிறுவனங்கள் எளிமையான அனுமதிகளுக்குத் தகுதி பெறும்,

அதே நேரத்தில் அதிக இடர் வகைகளின் கீழ் வரும் திட்டங்கள் தொடர்ந்து தொழில்நுட்ப ஆய்வு மற்றும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்.




## நேவாவின் செயலாக்கம்





- தேசிய மின்-விதான் செயலியை (நேவா) ஏற்றுக் கொள்வதற்கான தனது உறுதிப் பாட்டை மகாராஷ்டிர சட்டமன்றம் வெளிப்படுத்தியுள்ளது.

- இது இந்திய அரசின் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சகத்தின், டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒரு திட்டப் பணியாகும்.
- சட்டமன்றப் பணிகளை மேற்கொள்வதற்காக, அனைத்து 37 மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச சட்டமன்றங்களையும் ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளம் மூலம் டிஜிட்டல் மயமாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது "ஒரே தேசம், ஒரே செயலி" என்ற தொலைநோக்குப் பார்வையாகும்.
- இது உறுப்பினர்கள் தங்கள் சட்டமன்றப் பொறுப்புகளை மிகவும் திறமையாக நிறைவேற்ற உதவுவதோடு, குடிமக்களுக்கு சட்டமன்றப் பணிகள் மற்றும் நடவடிக்கைகளை எளிதாக அணுகவும் வழிவகுக்கும்.
- இவ்வாறு, இது வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தி, பொதுமக்களின் பங்கேற்பை வலுப்படுத்தி, டிஜிட்டல் முறையில் வலுவூட்டப்பட்ட சட்டமன்றச் சூழலுக்குப் பங்களிக்கும்.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள், 21 சட்டமன்றங்கள் ஏற்கனவே முழுமையாக டிஜிட்டல் அவைகளாக மாறியுள்ளன.

# முக்கிய தினங்கள்

## தேசியக் கொடி தினம் 2026 - ஜூலை 22




- 1947 ஆம் ஆண்டு ஜூலை 22 அன்று அரசியல் நிர்ணய சபையால் மூவர்ணக் கொடி (இந்தியாவின் தேசியக் கொடி) ஏற்றுக்கொள்ளப்பட்டதை நினைவுகூரும் வகையில் தேசியக் கொடி தினம் கடைபிடிக்கப்பட்டது.
- தற்போதைய தேசியக் கொடியானது இந்திய காவி, வெள்ளை மற்றும் இந்தியப் பச்சை ஆகிய மூன்று கிடைமட்டப் பட்டைகளைக் கொண்டுள்ளதுடன் அதன் நடுவில் கருநீல நிறத்தில் 24 ஆரங்களைக் கொண்ட அசோகச் சக்கரம் உள்ளது.
- 1947-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியக் கொடியில் இருந்த ராட்டையை (நூற்கும் சக்கரம்) மாற்றி அசோகச் சக்கரம் இடம்பெற்றது.
- இந்தியக் கொடிச் சட்டம் 2002 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. மேலும் தேசியக் கொடியின் காட்சி மற்றும் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்காக இது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.
- தேசியக் கொடியானது இந்தியாவின் ஒற்றுமை, இறையாண்மை, சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களைக் குறிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★